தினமணி

## மிளகாய் விலை வீழ்ச்சி: விவசாயிகள் கவலை

First Published : 30 Apr 2012 09:21:54 AM IST

திருவாடானை, ஏப். 29: திருவாடானை தாலுகா, ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் மிளகாய் விலை வீழ்ச்சி அடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

ஆர்.எஸ்.மங்கலம் பகுதிகளான சோழந்தூர், மேட்டு சோழந்தூர், தும்படாகோட்டை, செட்டியேந்தல்,ஆர்.எஸ்.மடை,செங்குடி, வண்டல், வரவணி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 190 ஏக்கர் பரப்பளவில் மிளகாய் விவசாயம் நடைபெறுகிறது. இப்பகுதியில் விளையும் குண்டு மிளகாய் அதிக காரமாக இருப்பதால் வெளி மாவட்டங்களில் அதிக கிராக்கி உண்டு.

ஆனால் இந்த ஆண்டு மிளகாய் விளைச்சல் அதிகரித்து விலை வீழ்ச்சி அடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து செங்குடி விவசாயி கார்த்திகேயன் கூறுகையில் இந்த ஆண்டு இப்பகுதியில் விளைச்சல் அதிகமாக இருந்தாலும், கடந்த ஆண்டைக் காட்டிலும் நடப்பு ஆண்டு விலை பெரும் நஷ்டத்தை உண்டாக்கி விட்டது.

கடந்த ஆண்டு கிலோ ரூ. 120 வரை விற்றது. ஆனால் இந்த ஆண்டு கிலோ ரூ.70லிருந்து ரூ. 75 வரை விற்கப்படுவதால் பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளோம் என்றார்.

## உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு ஆட்சியர் யோசனை

First Published : 30 Apr 2012 08:58:22 AM IST

பெரியகுளம், ஏப். 29: விவசாயிகள் நவீன தொழில்நுட்ப முறையை கடைபிடித்து, உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி தெரிவித்தார்.

பெரியகுளம் அருகே உள்ள தென்கரை பேரூராட்சியைச் சேர்ந்த டி.கள்ளிப்பட்டியில் நடைபெற்ற உழவர் பெருவிழாவிற்கு தேனி ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி தலைமை வகித்தார்.

பெரியகுளம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் எம்.செல்லமுத்து, தென்கரை பேரூராட்சித் தலைவர் வி.எம்.பாண்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பெரியகுளம் வேளாண்மை உதவி இயக்குனர் ஆர்.பெரியசாமி வரவேற்றார்.

விழாவில், ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி விசை தெளிப்பான், மின் மோட்டார் ஆகிய நலத்திட்ட உதவிகளை விவசாயிகளுக்கு வழங்கி பேசியதாவது:

விவசாயிகள் சிக்கனமாக நீரை பயன்படுத்திட சொட்டுநீர் பாசன முறையை கடைபிடிக்க வேண்டும். மேலும் நவீன தொழில்நுட்பங்களை கடைபிடித்து அதிக அளவில் விவசாய உற்பத்தியை பெருக்கி, மாநில அளவில் தேனி மாவட்டம் முதலாவது இடமாக திகழ பாடுபட வேண்டும் என்றார். மேலும் அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்தும் ஆட்சியர் விளக்கிக் கூறினார்.

வேளாண்மை அலுவலர் கே.ஜவஹர் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள்**

First Published : 29 Apr 2012 12:18:47 PM IST

பெரம்பலூர், ஏப். 28: பெரம்பலூர் அருகேயுள்ள அரணாரை கிராமத்தில் அண்மையில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கப்பட்டன.

நகர்மன்ற உறுப்பினர் சி. பழனிச்சாமி தலைமை வகித்தார். பெரம்பலூர் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் இரா. நலங்கிள்ளி தேன்மொழி, வேளாண்மைப் பொறியியல் துறை உதவிப் பொறியாளர் பாலசுப்ரமணியன், ஆவின் விரிவாக்க அலுவலர் அம்பேத்கர், வேளாண்மை அலுவலர் ரமேஷ் ஆகியோர் பேசினர்.

மண் மற்றும் நீர் மாதிரி சேகரித்தல் குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண்மைத் துறை சார்பில், மானிய விலையில் வெண்டை, முள்ளங்கி விதை, கைத்தெளிப்பான் வழங்கப்பட்டது. தஞ்சை கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் மூலம் அரசு திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதேபோல, நொச்சியம் கிராமத்தில் நடைபெற்ற விழாவுக்கு ஊராட்சித் தலைவர் டி. சங்கர் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் செந்தமிழ்செல்வன் முன்னிலை வகித்தார்.

உதவி வேளாண்மை அலுவலர்கள் இளையராஜா, பொறியாளர் அந்தர்வான் லாரன்ஸ் ஆகியோர் வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து விளக்கினர். விவசாயிகளுக்கு மானிய விலையில் கைத்தெளிப்பான் மற்றும் விதைகள் வழங்கப்பட்டன.

## முன்பருவ பயிர் சாகுபடி பயிற்சி முகாம்

First Published : 29 Apr 2012 09:31:56 AM IST

திருவள்ளூர், ஏப். 28: திரூர் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் முன்பருவ பயிர் சாகுபடி பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

÷உழவர் பெருவிழாவின் ஒரு பகுதியாக திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளுக்கு திரூர் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் பல்வேறு தொழில்நுட்ப பயிற்சிகள் தரப்பட்டு வருகின்றன.

÷அதன் ஒரு பகுதியாக முன்பருவ பயிர் சாகுபடி பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. அறிவியல் நிலையத் தலைவர் மு.தேவநாதன் பயிற்சியைத் தொடங்கி வைத்து முன்பருவ சாகுபடி பயிற்சி குறித்து விவரித்தார்.

÷து.முத்துராமலிங்கம் காய்கறி சாகுபடியில் துல்லியப் பண்ணையம் குறித்தும், ஆர்.மணிமாறன் திருந்திய நெல் சாகுபடி குறித்தும், யோகலட்சுமி விதை நேர்த்தி, விதை உற்பத்தி தொழில்நுட்பம் குறித்தும் விவரித்தனர்.

÷ச.நிர்மலாதேவி வேளாண் அறிவியல் நிலைய செயல்பாடுகள் குறித்தும், முனைவர் இ.சுமதி ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் குறித்தும் தொழில்நுட்ப உரையாற்றினர். ÷மாவட்டம் முழுவதும் இருந்து 80-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## இளநீர் விற்பனையில் தமிழகம் முதலிடம்:

ஏப்ரல் 30,2012,00:33



நடப்பாண்டு, வழக்கத்தை விட முன்னதாகவே கோடைக்காலம் துவங்கி விட்டதால், உடல் சூட்டை தணிக்கும் இள நீருக்கான தேவை அதிகரித்துள்ளது.இதனால், சில மாதங்களுக்கு முன்பு 15-18 ரூபாய் வரை விற்ற இளநீர், தற்போது, 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.தென்னிந்தியாவில், இளநீர் உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. அடுத்த இடங்களில் கர்நாடகா, கேரளா, ஆந்திரா ஆகிய மாநிலங்கள் உள்ளன.
இளநீர் உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும், அது தேவையை பூர்த்தி செய்யக்கூடியதாக இல்லை.தமிழகத்தில் உற்பத்தி யாகும் இளநீர், மாநிலத்தின் தேவையை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளதால்,குறைந்த அளவிற்கே கேரளாவிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது என, இளநீர் விற்பனையாளர் மேத்யூ ஜோசப் தெரிவித்தார்.கோடை காலத்தில்,கேரளா வில் கொப்பரை உற்பத்தி விறுவிறுப்பாக இருக்கும் என்பதால், இளநீர் வினியோகம் குறைவாகவே உள்ளது. அதனால் அண்டை மாநிலமான தமிழகத்தில் இருந்து அதிக அளவில் இளநீரை வரவழைக்க வேண்டியுள்ளது என, இளநீர் வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.
இது குறித்து, கொச்சி எண்ணெய் வியாபாரிகள் சங்கத் தலைவர் தாலத் முகமது கூறும்போது,"கேரளாவில் தேங்காய் உற்பத்தி உச்சத்தில் உள்ளது. அதனால், கொப்பரை உற்பத்தியில் பாதிப்பில்லை' என்று தெரிவித்தார்.பெரும்பாலான சமையல் எண்ணெய் வகைகள், கிலோ 100 ரூபாய்க்கும் அதிகமாக விற்பனையாகின்றன. ஆனால்,தேங்காய் எண் ணெய் விலை, கிலோ 70 ரூபாயாக உள்ளது. அதனால், சூரியகாந்தி எண்ணெய், கடலை எண்ணெய் ஆகியவற்றில் தேங்காய் எண்ணெயை கலந்து பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக, இந்திய சந்தையில் தேங்காய் எண்ணெய்க்கான தேவை உயர்ந்துள்ளது என தாலத் முகமது மேலும் கூறினார்.- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து -

## உரத்திற்கான தேவை 2.14 கோடி டன்னாக உயரும்

ஏப்ரல் 28,2012,00:19



புதுடில்லி:வரும் கரீப் பருவத்தில் (குளிர்கால சாகுபடி), நாட்டில், யூரியா, பொட்டாஷ், டை அமோனியம் பாஸ் பேட் உள்ளிட்ட உர வகைகளுக்கான தேவை, 2.14 கோடி டன்னாக அதிகரிக்கும் என, மத்திய வேளாண் இணை அமைச்சர் ஸ்ரீகாந்த் ஜெனா, பார்லிமென்டில் தெரிவித்தார்.

**யூரியா உரம்:**மேற்கண்ட மொத்த உர வகைகளுக்கான தேவையில், கரீப் பருவத்திற்கு, 1.58 கோடி டன் யூரியா வும், 69.40 லட்சம் டன் டை -அமோனியம் பாஸ்பேட்டும், 55.50 லட்சம் டன் கலப்பு வகை உரமும், 28.90 லட்சம் டன் சிங்கிள் சூப்பர் பாஸ்பேட் உரமும், 21.90 லட்சம் டன் பொட்டாஷ் உரமும் தேவைப்படும் என, அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு, ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான சாகுபடி காலத்தில், 2.88 கோடி டன் யூரியா உரத்திற்கு தேவை இருந்தது. இதுதவிர, 1.23 கோடி டன் டை-அமோனியம் பாஸ்பேட்டும், 45 லட்சம் டன் பொட்டாஷ் உரமும், 1.02 கோடி டன் கலப்பு உரத்திற்கும் தேவை இருந்தது.உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யும் அள விற்கு, இவற்றின் உற்பத்தி இல்லாததால், நம் நாடு, ரசாயன உரங்களை வெளிநாடுகளிலிருந்து அதிகளவில் இறக்குமதி செய்து கொள்ள வேண்டியுள்ளது.கடந்த 9வது மற்றும் 10வது ஐந்தாண்டு திட்ட காலத்தில், நாட்டின் மொத்த உரத் தேவையில், முறையே, 12 சதவீதம் மற்றும் 22 சதவீத அளவிற்கு, உர வகைகள் இறக்குமதி செய்து கொள்ளப்பட்டன.

**புதிய தொழிற்சாலை:**அதிகரித்து வரும், உரத் தேவையை கருத்தில் கொண்டு, மத்திய அரசு, நாட்டின் பல மாநிலங்களில், புதிதாகவும், ஏற்கனவே உள்ள உரத் தொழிற்சாலை களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் வகை யில், புதிய முதலீட்டு கொள்கையை அமல்படுத்தி வருகிறது.உள்நாட்டில் உர உற்பத்திக்கும், தேவைக்கும் இடை யில், 90 லட்சம் டன் என்றளவில் இடைவெளி உள்ளது. என, அமைச்சர் மேலும் கூறினார்.

## நெற்பயிரை காக்கும் இயற்கை பூச்சி கொல்லிகள்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 30,2012,02:51 IST

கருத்தை பதிவு செய்ய

திருவள்ளூர் : நெற்பயிரைக் காக்க இயற்கைப் பூச்சிக் கொல்லி மருந்துகளை சுயமாக தயாரிப்பது எப்படி என்பது குறித்து, வேளாண் விஞ்ஞானிகள் விளக்கம் அளித்துள்ளனர். நெற்பயிர்களில் அண்மைக்காலமாக அதிக நச்சுத்தன்மையுள்ள பூச்சிக் கொல்லி மருந்துகள், அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சில பூச்சிகள் இந்த மருந்துக்கு எதிர்ப்புத் திறன் பெற்று விட்டதால், அவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அதிக நச்சுத்தன்மையுள்ள மருந்துகளை பயன்படுத்துவதால், பயிர்களை தாக்கும் பூச்சிகளை

இயற்கையிலேயே பெருகா வண்ணம் தடுத்து நிறுத்தும், நன்மை செய்யும் பூச்சிகள் அழிகின்றன. அத்துடன் சுற்றுச்சூழலும் பாதிக்கிறது.
இதைத் தடுக்க, இயற்கைப் பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்தலாம். இதை விவசாயிகள் எப்படி சுயமாக தயாரிப்பது என்பது குறித்து வேளாண் விஞ்ஞானிகள் விளக்கம் அளித்துள்ளனர்.
மருந்து தயாரிக்கும் முறை
இதுகுறித்து, திரூர் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் தேவநாதன், பேராசிரியர் முத்துராமலிங்கம் ஆகியோர் கூறியதாவது: நெற்பயிருக்கு இயற்கை பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்துவதால், நமக்கு தீமைகள் ஏதுமில்லை. இயற்கைப் பூச்சிக் கொல்லிகள் ஒருகுறிப்பிட்ட இனப்பூச்சிகளை மட்டுமே தாக்கி அழிக்கும். சுற்றுச்சூழலையும் பாதிப்பதில்லை.
வேலிக்காத்தான், நாச்சி, கடல்பாளை ஆகிய தாவரங்கள் ஏதேனும் ஒன்றின் இலைகளைப் பறித்து நிழலில் உலர வைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு, 20 கிலோ காய்ந்த தூள் தேவைப்படும்.
இவற்றை பொடி செய்து ஒரு லிட்டர் தண்ணீருக்கு, 100 கிராம் என்ற அளவில், ஒரு ஏக்கருக்கு, 20 கிலோ தூளை, 10 முதல், 20 லிட்டர் நீரில், 12 மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.
பின்னர் நன்கு வடிகட்டி அதனுடன், 180 முதல், 190 லிட்டர் தண்ணீர் சேர்க்க வேண்டும்.
இவற்றுடன் டீபால், டிரைடான் அல்லது சாண்டோவிட் போன்ற ஒட்டும் திரவத்தை, 100 மி.லி., என்ற அளவில் கலந்து கரைசலை தெளிப்பதற்கு பயன்படுத்தலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.
நெற்பயிருக்கு இயற்கை பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்துவதால், நமக்கு தீமைகள் ஏதுமில்லை. இயற்கை பூச்சிக்கொல்லிகள் ஒரு குறிப்பிட்ட இனப்பூச்சிகளை மட்டுமே தாக்கி அழிக்கும்.

## விவசாயிகளுக்கு செயல்முறை பயிற்சி

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 30,2012,02:51 IST

கருத்தை பதிவு செய்ய

திருவள்ளூர் : விவசாயிகள் மத்தியில் தோட்ட பயிர்களுக்கு குழி தோண்டும் கருவியின் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.திருவள்ளூர் ஒன்றியம், ஆயலூர் கிராமத்தில் உழவர் பெருவிழா, ஊராட்சித் தலைவர் கோமதி தலைமையில் நடந்தது.
ஆட்கள் பற்றாக்குறை
நிகழ்ச்சியில், வேளாண்மைப் பொறியியல் துறை சார்பாக குழி தோண்டும் கருவியின் செயல் விளக்கம் விவசாயிகளுக்கு செய்து காண்பிக்கப்பட்டது.
இதுகுறித்து, செயற் பொறியாளர் ஆதித்தன் கூறியதாவது: மாவட்டத்தில் தோட்டப் பயிர்களான வாழை, மா, நெல்லி, கொய்யா, தென்னை போன்றவற்றை நட, குழி தோண்ட ஆட்கள் பற்றாக்குறை உள்ளது. இதற்காக, குழி தோண்டும் கருவி உள்ளது.

இதில் ஆட்கள் மூலம் குழி தோண்டுவதை விட விரைவாகவும், குறைந்த செலவிலும் தோண்டலாம். ஒரு மணி நேரத்தில், 25 முதல், 30 குழிகள், ஒரு அடி விட்டம், இரண்டு அடி ஆழத்தில் குழி தோண்டும்.

இக்கருவி மாவட்டத்தில் எங்களிடம் மட்டுமே உள்ளது. விவசாயிகள் குறைந்த வாடகையில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மானியம்

சொந்தமாக வாங்க விரும்புவர்களுக்கு, தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 25 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.இவ்வாறு ஆதித்தன் கூறினார். நிகழ்ச்சியில் உதவி செயற்பொறியாளர் சிவஞானசம்பந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**நவீன நிழல் வகை நாற்றங்கால் சாகுபடி திட்டம் துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 30,2012,05:40 IST

கருத்தை பதிவு செய்ய

திருச்செங்கோடு: கரும்பு சாகுபடியில் மகசூலை அதிகரிக்கும் வகையில், நவீன கரும்பு சாகுபடி முறைக்காக அமைக்கப்பட்ட நவீன நிழல்வகை நாற்றங்கால் சாகுபடி திட்டத்தை அறிமுகபடுத்தும் விதமாக, வேளாண் துறை மற்றும் பொன்னி சர்க்கரை ஆலை மானியத்துடன், நாமக்கல் மாவட்டத்தில், 20 இடங்களில் நிழல்வகை நாற்றங்கால் அமைக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி, திருச்செங்கோடு அடுத்த கொக்காரயன்பேட்டையில், விவசாயி பொன்னுசாமி வயலில் அமைக்கப்பட்ட நிழல்வகை நாற்றங்கால் துவக்க விழா நடந்தது. நாமக்கல் மாவட்ட வேளாண் இயக்குனர் பிரபாகரன் தலைமை வகித்து பேசியதாவது:

நவீன கரும்பு சாகுபடி மூலம் ஒற்றை நாற்றுகளை சொட்டுநீர் பாசன முறையில் நடவு செய்தால், கரணைகளுக்கு செலவு குறைந்து, அதிகரிக்கப்பட்ட உரம், நீர், சூரிய ஒளி மற்றும் காற்றோட்டம் காரணமாக, ஒரே எடை கொண்ட தரமான கரும்பை தயார் செய்து ஏக்கருக்கு, 100 டன் மகசூல் அடைவது சாத்தியம்.

ஊடுபயிர் சாகுபடி மற்றும் இடை உழவு பணிகளுக்காக இயந்திரங்களை பயன்படுத்துவது மூலம் அதிக அளவில் லாபம் அடைய முடியும். மேலும், வேலை ஆட்களின் செலவை வெகுவாக குறைக்க முடியும். விவசாயிகள் தரமான கரும்பை தயார் செய்து அதிக மகசூல் பெற்று பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் பேசினார். பள்ளிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன், பொன்னி சர்க்கரை ஆலை தலைவர் சந்திரமவுலி, துணைத் தலைவர் சாந்தன், மேலாளர் ராஜசேகரன், வேளாண் அலுவலர்கள், விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## மஞ்சள் கொள்முதல் செய்ய விவசாய சங்கம் வேண்டுகோள்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 30,2012,06:42 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: "மஞ்சளை தமிழக அரசே கொள்முதல் செய்ய வேண்டும்' என, இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்க தலைவர் தெய்வசிகாமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முதல்வர் ஜெயலலிதாவுக்கு, அவர் அனுப்பியுள்ள மனு:

மஞ்சள் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு குவிண்டால் மஞ்சள் உற்பத்தி செலவு சராசரி 8,700 ரூபாய். தற்போது ஒரு குவிண்டால் மஞ்சள் 2,200 முதல் 3,000 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஏக்கருக்கு, ஒரு லட்சத்து 14 ஆயிரம் ரூபாய் நஷ்டமாகிறது. மத்திய அரசு மஞ்சளை ஒரு குவிண்டால் 4,092 ரூபாய்க்கு கொள்முதல் செய்ய ஆந்திரா மற்றும் கர்நாடகா அரசுக்கு நிதி ஒதுக்கியுள்ளது. கர்நாடகா அரசு மத்திய அரசு அறிவித்த விலையுடன் 908 ரூபாய் மானியம் வழங்கி, 5,000 ரூபாய்க்கு கொள்முதல் செய்கிறது.

ஆந்திரா அரசும், 53 ஆயிரம் மெட்ரிக் டன் மஞ்சளை கொள்முதல் செய்கிறது. மஹாராஷ்டிரா அரசும் விரைவில் மஞ்சள் கொள்முதல் செய்வதாக விவசாயிகளுக்கு உறுதி அளித்துள்ளது. தமிழக அரசும் விவசாயிகளை காப்பாற்ற மஞ்சளை கொள்முதல் செய்ய வேண்டும். உற்பத்தி செலவை விடக் குறையாமல் கொள்முதல் செய்து, விவசாயிகளை நஷ்டமடையாமல் பாதுகாக்க வேண்டும்.

மஞ்சள், 12 ஆண்டுகளுக்கு கெடாது. அரசு இருப்பு வைத்து, விலை ஏறும்போது விற்றுக் கொள்ளலாம். அரசு இருப்பு வைக்கும் மஞ்சளுக்கான நிதியில் பெரும்பகுதியை வங்கிகளின் மூலம் பொருளீட்டு கடனாக பெற்றுக் கொள்வதன் மூலம், அரசுக்கு ஏற்படும் நிதிச்சுமையை சமாளிக்கலாம்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## மல்லிகை வரத்து அதிகரிப்பு 40 ரூபாய் வரை விலை சரிவு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 30,2012,06:41 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: கோடையில் மல்லிகை சீஸன் அமோகமாக இருப்பதால், வரத்தும் கணிசமாக அதிகரித்து, விலை, 40 ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்துள்ளது.

சேலம், தர்மபுரி, ஒசூர் மற்றும் ஈரோடு மாவட்டத்தில் சத்தி, கோபி, அந்தியூர், தாளவாடி சுற்றுவட்டாரப் பகுதியில், அதிக பரப்பளவில் மல்லிகை சாகுபடி செய்கின்றனர். இங்கிருந்து சென்ட் கம்பெனிக்கும், மாநகரப் பகுதியில் உள்ள பூ மண்டிகளுக்கும் விற்பனைக்கு கொண்டு

செல்கின்றனர். பெரும்பாலும், கோடையில் மல்லிகை பூ விளைச்சல் அமோகமாக இருக்கும். தற்போது, கோடை மழை தமிழகத்தில் ஆங்காங்கே பெய்ந்து வருவதால், காய்ந்து கிடந்த மல்லிகை செடிகள் பூத்துக் குலுங்குகின்றன.
தவிர, பூ கமிஷன் மண்டிகளுக்கு வரத்து அதிகரித்துள்ள நிலையில், விலையும், 40 ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்துள்ளது. சென்ட் கம்பெனியில் மல்லிகை பூ கூடுதல் விலைக்கு எடுப்பதால், விவசாயிகள் ஏற்றுமதி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர்.
ஈரோடு பூ கமிஷன் மண்டி உரிமையாளர் குட்டி, ""கோடை காலத்தில், மல்லிகை வரத்து அதிகமாக இருக்கும். சித்திரை மாதம் அக்னி நட்சத்திரம் துவங்கி, முடியும் வரை முகூர்த்த சீஸன் குறைவாகவே இருக்கும். இம்மாதங்களில் மல்லிகை விற்பனை குறைந்துள்ள நிலையில், வரத்து அதிகரிப்பால் விலை, 40 ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்து, கிலோ, 80 ரூபாய்க்கு விற்கப்படுகிறது,'' என்றார்.

**கோடை வெயில் காரணமாக மாதுளை விற்பனை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 30,2012,06:40 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: கோடையில் மாதுளை வரத்து கணிசமாக குறைந்தும், தேவை அதிகரிப்பால் கிலோவுக்கு, 30 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது.
மஹாராஷ்டிரா, கர்நாடகா உள்ளிட்ட பகுதியில் மாதுளை சாகுபடி அதிகம். குளிர்காலங்களில் மாதுளை உற்பத்தி அமோகமாக இருக்கும். கோடையில் உற்பத்தி குறையும். எனினும், அனைத்து தரப்பினர் மத்தியிலும் மாதுளம் பழங்களுக்கு நல்ல வரவேற்புண்டு. தற்போது, மாநிலம் முழுவதும் கோடை வெயில் உச்சத்தை அடைந்துள்ள நிலையில், பழங்கள் விற்பனை களை கட்டியுள்ளது. கோடை வெயில் காரணமாக மாதுளை வரத்து வெகுவாக குறைந்து வரும் நிலையில், தேவை அதிகரிப்பால் விலையும் கிலோவுக்கு, 30 ரூபாய் உயர்ந்துள்ளது. சென்ற மாதம், 80 ரூபாய்க்கு விற்ற பழம், தற்போது, 110 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.
ஈரோடு பழம் மண்டி உரிமையாளர் பாலு கூறியதாவது: மாதுளை விளைச்சல் குறைந்துள்ளது. மாதுளையில் இரும்பு சத்து, ரத்த விருத்தியடையும் தன்மை உள்ளதால், அனைத்து தரப்பினரும் விரும்பி வாங்குவர். சென்ற மாதம் தரத்தின் அடிப்படையில் கிலோ, 75 முதல், 90 ரூபாய்க்கு விற்ற பழம், 30 ரூபாய் அதிகரித்து, 110 முதல் 120 ரூபாயாக உயர்ந்துள்ளது. ஜூலை வரை வெயிலின் தாக்கம் நீடிக்கும் என்பதால், விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## சூரியகாந்தி விதை விலை உயர வாய்ப்பு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 30,2012,03:22 IST

கருத்தை பதிவு செய்ய

வேலாயுதம்பாளைம்: சூரியகாந்தி விதைக்கு விலை உயர வாய்ப்பு இல்லாததால், அவற்றை உடனடியாக விற்பனை செய்ய விவசாயிகளை வேளாண்மை மையம் அறிவுறுத்தியுள்ளது.

கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம், மண் மங்கலம், நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, நடையனுார், வேட்டமங்கலம், பண்டுதகாரன்புதுார், செம்மடை, தளவாபாளையம் உள்ளிட்ட சுற்றுப்பகுதியில் சுமார் ஆயிரம் ஏக்கருக்கு மேல் கடந்த கார்த்திகை மாதத்தில் சூரியகாந்தி சாகுபடி செய்யப்பட்டது. தற்போது சூரியகாந்தி அறுவடைப்பணிகள் விறுவிறுப்பாக தொடங்கியுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலையில் இயங்கும் தேசிய வேளாண்மை புதுமைத் திட்டம் மற்றும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் உள்ளதாவது:

இந்தியாவில் கடந்த 2010-11 ஆண்டு கரீப் பருவத்தில் சூரியகாந்தி விதை உற்பத்தி 1.35 லட்சம் டன்னாக இருந்தது. 2011-12 ம் ஆண்டில் சூரியகாந்தி விதை 1.20 லட்சம் டன் சாகுபடி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கர்நாடகா, மகாராஷ்டிரா, மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் சூரியகாந்தி உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழகத்தில் கரூர், திருச்சி, திண்டுக்கல், திருவண்ணாமலை மற்றும் தூத்துக்குடி ஆகியவை சூரியகாந்தி அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

கடந்த கார்த்திகை மாதம் சாகுபடி செய்த சூரியகாந்தி சந்தைக்கு விற்பனைக்கு வர ஆரம்பித்துள்ளது. அதிக விலை கிடைப்பதற்கான வாய்ப்புகளை எதிர்நோக்கி விவசாயிகள் காத்திருக்கின்றனர். இதனால் வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 12 ஆண்டுகளாக நிலவிய சூரியகாந்தி விதையின் விலைகள் குறித்து ஆராயப்பட்டது.

அதில் வரும் ஜூன் மாதம் ஒரு கிலோவு சூரியகாந்தி விதையின் விலை 30 ரூபாய் முதல் 34 ரூபாய் வரை இருக்கலாம் என தெரிகிறது. மேலும், விலை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகவே உள்ளது. எனவே, விவசாயிகள் சூரியகாந்தியை அறுவடை செய்து விதையை இருப்பு வைக்காமல் உடனே விற்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கொட்டை முந்திரி விலை: விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 30,2012,01:43 IST

கருத்தை பதிவு செய்ய

வருஷநாடு:வருஷநாடு பகுதியில் கொட்டைமுந்திரி காய்ப்பு தொடங்கி விட்ட நிலையில், விலையும் அதிகரித்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கண்டமனூர், கடமலைக்குண்டு, ஆத்தாங்கரைப்பட்டி, பாலூத்து, தங்கம்மாள்புரம், முத்தலாம்பாறை,கோம்பைத்தொழு,வருஷநாடு, வாலிப்பாறை, முருக்கோடை, சிங்கராஜபுரம், சாந்திபுரம், காமராஜபுரம், தும்மக்குண்டு,காந்திக்கிராமம் ஆகிய பகுதிகளில் சுமார் பத்தாயிரம் ஏக்கரில் கொட்டை முந்திரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் இருந்து வெளி மாநிலங்களுக்கும் கொட்டை முந்திரி பருப்பு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

கடந்தாண்டை விட இவ்வாண்டில் போதிய மழை இல்லாததால் உற்பத்தி குறைந்துள்ளது.

தற்போது கொட்டை முந்திரி விலை கிலோ ரூ.58 முதல் 63 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.இதனால் கொட்டை முந்திரி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## வாழைக்கன்றில் நோய் விவசாயிகள் அதிர்ச்சி

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 30,2012,01:51 IST

கருத்தை பதிவு செய்ய

காரியாபட்டி:விருதுநகர், மல்லாங்கிணர், பெரிய புளியம்பட்டியில் விவசாயிகள் பலர் வாழை கன்றுகள் நட்டுள்ளனர்.

இதில் இலை சுருட்டு நோய் தாக்கியதால் பல ஏக்கர் வாழை கன்றுகள் நாசமாயின. இதனால் விவாயிகள் தாங்கள் செலவழித்த பணம் கிடைக்குமா என்ற ஆதங்கத்தில் உள்ளனர்.

விவசாயி முத்தையா கூறுகையில், ""ஐந்து ஏக்கரில் வாழை மரக்கன்று நட்டேன். சில நாட்களுக்கு முன்பு வாழை கன்றுகளை இலை சுருட்டி நோய் தாக்கியதால் கருகின. இதனால் ரூ. 10 லட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கூறியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை" என்றார்.